### ஒன்றிய அரசு நமது கோரிக்கையைக் கேட்காத காரணத்தால் தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படுகிறது!

# டங்ஸ்டன் சுரங்கத் திட்டத்தை தற்போது இந்த மன்றமே எதிர்க்கின்றது!

## சட்டப்பேரவையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் விளக்கமான பதில்!

**சென்னை, டிச.11 –**

**சட்டப்பேரவையில் டங்ஸ்டன் சுரங்க உரிமையை உடனே ரத்து செய்க என்று வலியுறுத்தி நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கொண்டு வந்த அரசின் தனித்தீர்மானத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசுகையில், அப்போது குறுக் கிட்டு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அரசின் தொடர் நடவடிக்கையை பட்டியலிட்டு ஆற்றிய விளக்க உரை வருமாறு:–**



ஒரு தவறான செய்தியை மீண்டும், மீண்டும் அவையில் பதிவு செய்கிறீர்கள். அவர், நீங்கள் கடிதம் எழுதுகிறீர்கள். அந்தக் கடிதத்தில் என்ன இருக்கிறது என்று சொல்லவில்லை. அதற்கு அவர்கள் என்ன பதில் அனுப்பியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை என்று கேட்கிறார். அதுபற்றி தெரியவில்லை, இதுபற்றி தெரியவில்லை என்பது சரியல்ல. நீங்களும் ஒரு முதலமைச்சராக இருந்தவர்.

இந்தமாதிரி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரும்போது, அந்த documents குறித்த விவரங்கள் முழுவதும் தீர்மானத்தில் வராது. உங்களுக்கு அது தேவையென்றால், நீங்கள் வேறு ஒரு தனித் தீர்மானம் போட்டு, அதன் விவரங்கள் என்ன என்பதைக் கேட்கலாம். ஆகவே, இந்தத் தீர்மானத்தில் என்ன சொல்வார்கள் என்று கேட்டால், மைய கருத்தைத்தான் சொல்வார்கள். அவர் இங்கு வந்து, இதை நீங்கள் வைக்கவில்லை, போதவில்லை என்று சொல்கிறார்.

**சுயமரியாதைக்கு விடப்பட்ட சவால்!**

இதில், இந்த ஏலம் விடும் அதிகாரமானது The Mines and Minerals (Development and Regulation) Act சம்பந்தப்பட்டது. அதைத்தான் MMDR Act என்று சொல்வார்கள். அந்த Actல் ஒரு திருத்தத்தை அவர்களே செய்து விட்டார்கள். யாரையும் கேட்கவில்லை. திருத்தத்தை செய்துவிட்டு, ‘அந்தக் கனிமத்தை, டங்ஸ்டனை ஏலம் விடுகிற அதிகாரம் ஒன்றிய அரசுக்கு மட்டுமே உண்டு என்று சொல்கிறது. இது ஒன்றும் கேவலம் அல்ல; அடுத்து ஒன்று சொல்கிறார்கள்; ஒன்றிய அரசால் தேர்வு செய்யப்படும் ஏலதாரருக்கு சுரங்கக் குத்தகை வழங்கும் அதிகாரம் மட்டுமே மாநிலத்திற்கு உண்டு என்று. ஆக, ஆண்டான் அடிமை; இது சுயமரியாதைக்கு விடப்பட்ட சவால். கனிம வளம் மட்டும் போகவில்லை.

நம்முடைய மானமே இதில் போய் விட்டது. ஆக நான் ஏலம் விட்டுவிடுவேன். ஏலம் விட்ட பிறகு இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திற்குச் சொல்வேன். அவர்களுக்கு நீங்கள் மரியாதையாகக் கொடுங்கள் என்று சொன்னால், இவர் என்ன எஜமானா; மத்திய சர்க்காரின் ஏவலுக்கு மாநில சர்க்கார் கைகட்டி நிற்கிற வேலைக்காரனா? அந்த அதிகாரத்தோடு இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத் திருத்தம் பற்றி தெரிவித்தவுடனே நான் 3-10-2023 அன்று ஒன்றிய சுரங்கத் துறை அமைச்சருக்கு உடனே கடிதம் எழுதினேன்.

விவரமாக எழுதினீர்களா என்று கேட்கிறீர்களா? இதோ சொல்கிறேன். ‘நில உரிமைகள் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதால், we are the owner of this land. மேற்படி சட்டத் திருத்தம் மாநில அரசின் உரிமைகளைப் பறிப்பதாக இருக்கிறது. இதைவிட என்ன நான் சொல்வது? எனவே, முக்கியத்துவம் மற்றும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த கனிமங்களுக்கு critical and strategic mineralsக்கு சுரங்கக் குத்தகை அனுமதி வழங்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கே அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இதற்கு மேல் என்ன சொல்வது? ஒரு மரியாதைக்காகத்தான் மரியாதையாகச் சொல்ல முடியும்.

’அடுத்து, நீங்கள் என்ன செய்தீர்கள் என்று சொல்கிறீர்கள். இவையெல்லாம் நடந்தபிறகு அவர்கள் திருப்பி சொன்னபிறகு, அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், எங்களுக்குத்தான் அதிகாரம் உண்டு; நீங்கள் எல்லாரும் எங்களுக்கு ஒத்துழையுங்கள் என்று கேட்டு விட்டு விட்டார்கள். உடனே அதற்காக ஒரு குத்தகை நிலைமை இப்படி இருக்கும் போது, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும், நாம் இன்னொன்று பார்க்க வேண்டும். நாம் சொன்னது தப்பா right?ஆ என்று பார்க்க வேண்டும். Mineral Exploration Corporation Limited அவர்கள் நம்மிடம் என்ன பாதிப்பு என்று கேட்டார்கள். புள்ளி விவரங் களைத் தெரிவிக்கவும்.

இந்தப் பகுதியில் அரிட்டாப்பட்டி கிராமத்தில் 4.04 ஹெக்டேர் நிலமும், மீனாட்சிபுரம் கிராமத்தில் 53.58 ஹெக்டேர் நிலமும் பல்லுயிர் சரகமாக வரையறுக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை புள்ளியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையாளர், Mineral Exploration Corporation Limited அவர்களுக்கு அனுப்பினோம். நாங்கள் சொல்வது தவறா என்று கேட்டார்கள். அது கேட்கப்பட்ட பிறகுதான், அவர்கள் நாயக்கர்பட்டியில் 24.2 .2024 அன்று ஏலம் விட்டார்கள். ஏலம் விட்டுவிட்டு இந்துஸ்தான் நிறுவனத்திற்கு தகுதியான ஏலமாகக் கருதியிருக்கிறோம் என்று அரசு அறிவித்தது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு-கொடு என்று கேட்டார்கள்.

**ஏலம்!**

அந்த நேரத்தில்தான் தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளரான முகிலன் அவர்கள், நாயக்கர்பட்டி பகுதியில் டங்ஸ்டன் கனிம உரிமம் வழங்குவதை எதிர்த்து மேற்கொண்டு தீர்மானத்தை அவர்கள் கொடுத்தார்கள். இவ்வளவும் நடந்து முடியவில்லை. அப்போதும் அவர்கள் கேட்கவில்லை என்ற பிறகுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பிரதமர் அவர்களுக்கே ஒரு கடிதத்தை எழுதினார்கள்.

டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை கைவிடவே ஒன்றிய சுரங்க அமைச்சருக்கு அறிவுறுத்துமாறு எழுதினார்கள். அந்த அமைச்சருக்கு- முதல்வர் அவர்கள் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் இந்தப் பகுதியிலே டங்ஸ்டன் உரிமம் திட்டத்தை கைவிட ஒன்றிய சுரங்க அமைச்சருக்கு அறிவுறுத்துமாறு தமிழக முதல்வர் தனது 28.11. 2024ல் கடிதத்தில் குறிப்பிட்டு பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதுகிறார். பிரதமர் அவர்களும் பேசாமல்ஏன் இந்துஸ்தான் லிமிடெட் வேதாந்தா விவகாரம்; ஆகையினால், நாங்கள் எல்லாம் தெரியாமல் இல்லை. நாங்கள் செய்கிறோம். நீங்கள் பேசும்போது, என்ன சொல்கிறீர்கள், தெரிய வருகிறது, தெரிய வருகிறது, ஏனென்றால் உங்களுக்கு தெரியவருவதற்கு material இல்லை. ஆகையால், உங்களைத் தப்பாக நான் சொல்லவில்லை. நீங்களும் முதலமைச்சராக இருந்தவர். நிர்வாகத்தில் அப்படித்தான் இருக்கும். ஒரு தீர்மானத்தை போடுவோம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அனுபவம் மிக்கவர். முதலமைச்சராகவும், அமைச்சராகவும் இருந்தவர் ஆவார். நீங்கள் முதலமைச்சராக இருந்தபோது, மத்திய சர்க்காருக்கு எத்தனையோ கடிதங்கள் எழுதியிருக்கிறீர்கள். அதில் ஒன்றாவது எங்களுக்கு கொடுத்திருக்கிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) இல்லையே, Sir. அரசு, Sir. ஓர் அரசு இன்னொரு அரசுக்குChief Minister, Prime Ministerக்கு எழுதுகிறார்கள். அதை உங்களுக்கு அனுப்ப வேண்டுமா? (மேசையைத் தட்டும் ஒலி) என்ன Sir அநியாயமாக இருக்கிறது. உங்களை ஒன்று கேட்கிறேன். இதை ஆதரிக்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா? சொல்லிவிடுங்கள், முடித்து விடலாம்.

நான் எழுதிய கடிதத்தில் என்னென்ன தெரிவித்தேன் என்று அதை சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தில் டங்ஸ்டன் சுரங்க உரிமத்தை இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட்டுக்கு கொடுக்கக் கூடாது என்று அந்த அமைச்சருக்கு அறிவுறுத்துங்கள் என்று பிரதமருக்கு கடிதம் எழுதிய அந்த இரண்டு ஷரத்துகளையும் உங்களிடம் சொல்லி விட்டேன். இதற்குமேல் என்ன வேண்டும். அந்த copy வேண்டுமா?

நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் எழுதுகிறார், முதலமைச்சர் அவர்கள் எழுதுகிறார். அவர்கள் என்ன கடிதம் எழுதுகிறார் என்று கேட்கிறார். எழுதுகிறார்கள். எனக்கு இப்படி என்று தெரிந்து இருந்தால், அந்த post office முத்திரையோடு கொண்டு வந்திருப்பேன். 2-11-2023 அன்று தொல்லியல் சுரங்கத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் உரிய சட்டத் திருத்தங்களை மேற்கொண்ட பிறகே, இந்த ஏலம் விடுவதாகவும், தேசிய அளவிலான தேவைகளை கருத்துகளைக் கொண்டு, மாநில அரசுகள் இந்த கொள்கைக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்கள். இல்லை என்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். இது மாதிரி எதிர்த்தோம். நான் கடிதம் எழுதினேன். அவரும் கடிதம் எழுதினார். சுற்றுச் சூழல் அவர்களும் கடிதம் எழுதினார். எதற்கும் பணியாத காரணத்தினால்தான் இந்த மன்றமே இந்தத் திட்டத்தை எதிர்க்கிறது, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறது என்று இங்கே கொண்டு வந்து இருக்கிறோம். நீங்கள் இப்போது என்ன சொல்கிறீர்கள். இந்தத் திட்டம் நமக்கு தேவையில்லாத ஒன்று தானே! சுரங்கம் வரக்கூடாது இல்லையா! அப்படியென்றால் தீர்மானத்தை ஆதரியுங்கள். இல்லை, வேதாந்தா பக்கம் நீங்களும் சேர்ந்திருந்தால் ஆதரித்துவிட்டுப்போங்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரக்கப் பேசுகிறார். நானும் பேசிவிடுவேன். ஏற்கெனவே இந்தத் திட்டத்தையெல்லாம் நாங்கள் முயற்சி எடுத்து, ஒன்றிய சர்க்காருக்குத் தெரிவித்து, அவர்கள் கேட்காத காரணத்தால்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சர் இந்த மாபெரும் சபையில் ‘நான் முதலமைச்சராக இருக்கின்ற வரையில், ஒன்றிய சர்க்காரே அதை கொண்டு வருவேன் என்று சொன்னாலும் சரி, அதை நான் இங்கு நடத்த விட மாட்டேன்’ என்று 3 முறை பிரகடனப்படுத்தியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த பிரகடனத்திற்கு பிறகுகூட நீங்கள் சந்தேகிக்கிறீர்கள் என்று சொன்னால், இதைவிட நீங்கள் வேதாந்தாவிற்கே நேரடியாக பேசிவிடலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு அவரைப் பற்றி தெரியும். நல்ல அனுபவம் உள்ளவர். அதைப் பற்றி ஒன்றும் கிடையாது. ஆனால், நான் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். நீங்களும் முதலமைச்சராக இருந்திருக்கிறீர்கள். இப்போது பிரச்சினைகளையெல்லாம் முடிவு செய்ய வேண்டும். நமக்கு வேண்டியது என்ன? அந்தத் திட்டத்தை அனுமதிக்கக் கூடாது என்பதுதான் நமது திட்டம். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உங்களையும் சேர்த்துத்தான் ‘நான் இருக்கிற வரையில் அதை வரவிட மாட்டேன்’ என்று ஒரு தடவைக்கு மூன்று தடவை பிரகடனம் செய்கிறபொழுது நீங்கள் என்ன செய்திருக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உறுதியை நம்பி, நாங்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறோம் என்று சொல்லியிருந்தால், அதுதான் பெருமையாக இருக்கும்.

ஒன்றும் பயப்பட வேண்டாம். அவர்களுக்கு அந்தச் சட்டத்தில் என்ன திருத்தம் இருக்கிறது என்று கேட்டீர்களென்றால், ஏலம் விடுகிற அதிகாரம் ஒன்றிய அரசுக்கு மட்டுமே உள்ளது.

அடுத்த sentence, சுரங்க குத்தகை வழங்கும் அதிகாரம் மட்டுமே அரசுக்கு உண்டு. எனவே, அவர்கள் ஏலம் விட்டாலும், குத்தகை விடுகிற அதிகாரம் இவர் கையில்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நிச்சயமாக இந்த அரசு அவர்களுக்கு குத்தகையை கொடுக்க மாட்டோம். எங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. ஒன்றிய அரசு எங்களை ஒன்றும் செய்துவிட முடியாது. அதை எதிர்க்கின்ற வல்லமை, தைரியம் எங்களுடைய முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

**எடப்பாடி கே. பழனிசாமி:** தமிழ்நாடு மக்களை பாதிக்கக்கூடிய எந்தவொரு திட்டமாக இருந்தாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அனுமதிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில் இப்பொழுது இங்கே இருக்கின்ற டங்ஸ்டன் கனிம சுரங்க ஏலத்தை மத்திய அரசால் இன்றைக்கு விடப்பட்டிருக்கின்றது. அதை தடுத்து நிறுத்துவதற்காக இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறீர்கள். நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



தி.மு.க. மாநில ஆதிதிராவிடர் நலக்குழு தென்மண்டல ஆய்வுக் கூட்டம் திருச்செந்தூர் ஐ.எம்.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. ஆய்வுக் கூட்டத்தில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்துகொண்டு தி.மு.கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூகநலம் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ.கீதா ஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### கட்டுப்பாட்டுடன் பணியாற்றினால்

# 200 தொகுதிகளில் தி.மு.க. அணிக்கு வெற்றி நிச்சயம்!

## திருச்செந்தூரில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

திருச்செந்தூர், டிச. 11 –

2026 சட்டமன்றத் தேர்தலில் கட்டுப்பாடுடன் பணியாற்றினால், 200 தொகுதிகளில் நிச்சயம் வெற்றி வெறுவோம் என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசுகையில் குறிப்பி ட்டார்.



தி.மு.க. மாநில ஆதிதிராவிட நலக்குழு தென்மண்டல ஆய்வுக் கூட்டம் திருச்செந்தூர் ஐ.எம்.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. ஆய்வுக் கூட்டத்தில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு தி.மு.கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசியது வருமாறு:

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் பாடுபடக்கூடிய அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டும். அதுவும் சுயமரியாதையோடு கிடைக்க வேண்டும். அதே நேரத்தில் கல்வி, சமூக மதிப்பு, வேலை வாய்ப்பு அனைத்தும் உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாடுபட்டு வருகிறார்.

தி.மு.க. மீது பல விமர்சனங்கள் வருகின்றன. உயர் ஜாதியினருக்கு எதிரானவர்கள் என்ற கட்டமைப்பை உருவாக்கி வருகிறார்கள். இன்னொருபுறம், ஆதிதிராவிட மக்களுக்கு தி.மு.க. என்ன செய்ததது என கேள்வி கேட்கிறார்கள். எல்லோரும் ஒன்றாக வாழ வேண்டும் என்பதற்காக முன்னாள் தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள் சமத்துவபுரத்தை உருவாக்கினார். எல்லோரும் ஒன்றாக வாழ முடியும் என்பதை உலகிற்கு உணர்த்தியவர் அவர்தான்.

அதே போல், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு, உள்ஒதுக்கீடு தந்தவர் கலைஞர் கருணாநிதி. குடிசை மாற்று வாரியத்தைக் கொண்டு வந்தவர் அவர்தான். அதேபோல், ஒடுக்கப்பட்ட மக்களும் தொழில்முனைவோராக உருவாகி, அவர்களுக்குக் கீழ் பத்துபேர் வேலை செய்ய வேண்டும் என்பதற்காக அம்பேத்கர் பெயரில் திட்டத்தை உருவாக்கி தொழில் முனைவராக மாற்றுவதற்குத் திட்டத்தை தந்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின். இதேபோல் எத்தனையோ திட்டங்கள் திராவிட மாடல் ஆட்சியில் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு தி.மு.க.வின் சாதனைகளைப் பட்டியலிட்டுக் காட்ட முடியும்.

தி.மு.க. இந்த மக்களை என்ன செய்கிறது என்று கேள்வி எழும். தேர்தல் நெருங்கி வருகிறது. வாட்ஸ் ஆப்பில் பொய்ச் செய்திகளைப் பரப்பி வருகின்றனர். பல மாநிலங்களில் மக்களைப் பிரித்துத் தான் குழப்பங்களை உருவாக்கி சிலர் வெற்றிகளைப் பெற்று இருக்கிறார்கள். இங்கேயும் நம்மைப் பிரிக்க சிலர் குழப்பம் செய்கிறார்கள். அந்தக் குழப்பம் வந்துவிடாமல் நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

நம்முடைய சாதனைகளை இளைஞர்களுக்கு சொல்ல வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஆட்சி தான் தி.மு.க. ஆட்சி. மக்களிடம் தெளிவாக இதை சொல்ல வேண்டும். தெருமுனை பிரச்சாரம், தெரு முனை கூட்டங்கள் நடத்தி தி.மு.க. ஆட்சியில் செய்த சாதனைகளை சொல்ல வேண்டும். இதை செய்தாலே நம்மை தாண்டி தமிழகத்தில் யாரும் வெற்றி பெற முடியாது. எந்த மாறுபாடு இல்லாமல் தேர்தல் வெற்றியைப் பெற வேண்டும்.

வருகின்ற 2026 தேர்தல் வெற்றி என்பது மக்களாகிய உங்களுடைய கரங்களில் தான் இருக்கிறது. எனவே, கட்டுப்பாடோடு பணியாற்றினால் வெற்றி நிச்சயம் இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்திற்கு, ஆதி திராவிடர் நலக்குழு மாநில செயலாளர் கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., தலைமை தாங்கினார். தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூகநலம் மகளிர் உரிமைத் துறை அமைச்சருமான கீதா ஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### நாடாளுமன்றத்தில்

# எம்.பி.க்களை நாகரீகமாக நடத்துங்கள்!

## மாநிலங்களவையில் திருச்சி சிவா ஆவேசம்!

புதுடெல்லி, டிச. 11 –

“நாடாளுமன்றத்தில் எம்.பி.க்களை நாகரீகமாக நடத்துங்கள்” என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா ஆவேசமாக குரல் எழுப்பினார்.

இது அவர் மாநிலங்களவையில் பேசியதாவது:

வேதனையோடு பதிவு செய்கிறேன். இந்த அவை உறுப்பினரும், எனது கட்சியைச் சேர்ந்தவருமான அப்துல்லா அவர்கள் மைய மண்டபத்திற்குள் நுழையும் போது தடுத்து நிறுத்தி அவரை நீங்கள் எம்.பி.யா? என்று கேட்பதும் ( கூச்சல்) தயவு செய்து உங்களது காதுகளால் கொஞ்ச நேரம் கவனியுங்கள்.



அடுத்த நாள் நான் அவைக்கு எடுத்து வர வேண்டிய ஒரு காகிதத்தை மறந்து விட்டேன். அதைக் கொண்டு வந்த எனது தனிச் செயலரை படிக்கட்டுகளிலே தடுத்து நீங்களெல்லாம் இங்கே வரக் கூடாது. உங்களது அடையாள அட்டையை ரத்து செய்துவிடுவோம் என்பதெல்லாம் எங்களுக்கு புதிதாக இருக்கிறது. நானும் இரண்டு தசாப்தங்களாக இந்த நாடாளுமன்றத்தில் இருக்கிறேன். இது போன்ற அனுபவமெல்லாம் இதுவரை சந்தித்ததில்லை. எனவே கனிவோடு கேட்கிறேன். நாடாளுமன்றத்தில் எம்.பி.க்களை நாகரீகமாக நடத்துங்கள்.

இவ்வாறு திருச்சி சிவா பேசினார்.

### ஒட்டப்பிடாரம் வழியாக

# சென்னைக்கு புதிய பேருந்து வசதி செய்து தரப்படுமா?

## பேரவையில் எம்.சி.சண்முகையா கேள்வி!

சென்னை, டிச. 11 –

ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் பிரசித்தி பெற்ற அந்தோணியார் திருத்தலம் உள்ளதை கருத்தில் கொண்டு திருநெல்வேலியிலிருந்து சென்னைக்கு புதிய பேருந்து வசதி செய்து தரப்படுமா? என்று பேரவை யில் உறுப்பினர் எம்.சி.சண்முகையா கேள்வி எழுப்பினார்.

இது குறித்து விவரம் வருமாறு:

எம்.சி.சண்முகையா: பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில், புளியம்பட்டியில் பிரசித்தி பெற்ற புனித அந்தோணியார் திருத்தலம் உள்ளதால், அதனைக் கருத்திற்கொண்டு, திருநெல்வேலி யிலிருந்து, சீவலப்பேரி புளியம்பட்டி ஒட்டப்பிடாரம் வழியாக சென்னை வரை புதிய பேருந்து வசதி செய்துதரப்படுமா என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறியவிரும்புகிறேன்.



அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்: உறுப்பினர் அவர்கள் புளியம்பட்டியில் இருக்கின்ற கோயில்தான் பிரசித்திப்பெற்றது என்று சொல்கிறார். எனவே, அங்கே செல்ல வேண்டுமென்றால், எங்கிருந்து செல்ல வேண்டும் என்பதைத் தெரிவித்தால், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். சென்னைக்குச் செல்வதற்கு தனியாகக் கோரிக்கை வைக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.